Koviloor Digital Library

உ

சிவமயம்

செம்பொன்னூர்

ஸ்ரீ ஐந்நூற்று விநாயகப் பெருமானுக்கு

செய்த

கணபதி ஓம வெளியீடு

★

கும. நா. நா. சா. நா.

27--4--56.

Acc. No. 35331
3-9

Koviloor Digital Library

Koviloor Digital Library
3-2

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 35331

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வல்முறை இறையே.

திருச்சிற்றம்பலம்

—சம்பந்தர்.

Koviloor Digital Library

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஔவையார்

அருளிய

விநாயகர் அகவல்

ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாலும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே !

Koviloor Digital Library

முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலந் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்துஇருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

Koviloor Digital Library

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி

Koviloor Digital Library

என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே.

Koviloor Digital Library

உ

சிவமயம்

ஐந்நூற்று விநாயகர் தோத்திரம்.

ஆசிரியப்பா,

திருவருள் வளர்ந்திடும் செம்பொனூர் வாழும்
அருளுடைக் கணபதி ஐங்கர மூர்த்தி
சரணம் சரணம் தாளடி சரணம்
விக்கின விநாயகா விமலா சரணம்
அடியார் வினைகளை அறுப்பாய் சரணம்
ஐம்புலக் கட்டினை அழிப்பாய் சரணம்
மனதுக் குறுதியும் மகிழ்வும் அருள்செயும்
ஐந்நூற்று விநாயகா ஐங்கரா
சரணம் நீயே தஞ்சம் அருள்கவே.

அன்பு—கருணையானந்தா.

Koviloor Digital Library

உ

சிவமயம்.

நேமங்கோயில்
ஜெயங்கொண்டசோளீசர் தோத்திரம்.

அறிவரும் வேதா கமங்களுங் கூறற்
    கரியநின் திருவடித் துணையில்

நெறிவழா தன்பாற் பூசைசெய் திறமும்
    நிறைபல செல்வமும் அருள்வாய்

மறிமழு வணிந்து மால்விடை யூரும்
    வள்ளலே நேமங்கோ யிலிற்சீர்

செறிசவுந் தரநா யகியுடன் விளங்கும்
    செயங்கொள்சோ ளீச்சுரத் தானே.

சேவு. மெ.

Koviloor Digital Library

உ
சிவமயம்
நேமங்கோவில்

ஸ்ரீ சௌந்தரநாயகி தோத்திரம்

நயங்கொள்செந் தமிழால் தோத்திரம் புரிவார்
நண்ணிடத் தண்ணருள் செய்யும்
வயங்கொள்பல் பேறு மென்றனக் கருள்வாய்
மதகரி மாமுகன் தன்னைப்
புயங்கொள்வேல் குகனைத் தந்திடுந்தாயே
புவிபுகழ் நேமங்கோ யிலில்வாழ்
செயங்கொள்சோ ளீசப் பரமனுள் மகிழத்
திகழ்சவுந் தரியநா யகியே.

சேவு மெ.

KOVILOOR ANDAVAR
A. No.........
LIBRARY KOVILOOR

Koviloor Digital Library

வாழ்த்து

ஆறிரு தடக்தோள் வாழ்க;
அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க;
யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க;
வாழ்கசீர் அடியா ரெல்லாம்.

—கந்தபுராணம்

Koviloor Digital Library

விநாயகர் பிரஸ், காரைக்குடி.